6

# பெற்றோர்த்துவத்திற்குத் தேவனுடைய முக்கியதிட்டம்

*வேதபாடப் பகுதி:* உபாகமம் 6:4-9.

இன்றைய நாட்களில் பெற்றோராய் இருத்தல் என்பது எப்படிப்பட்ட அறைகூவலாக உள்ளது! தேவனுடைய உதவியில்லையேல், இந்தப்பணிப்பொறுப்பு நம்மை மூழ்கடிக்கக்கூடும். நமது பிள்ளைகளை சீஷர்கள் ஆக்குவதற்குப் பெற்றோர்கள் தேவனுடைய கூட்டாளிகளாய் இருக்க வேண்டும்.[1]

பல ஆண்டுகளுக்கு முன்பு, பெற்றோர்களின் இன்னொரு குழுவினர் ஒரு மாபெரும் அறைகூவலை எதிர்கொண்டனர்: அது, தங்களின் பிள்ளைகள் திணிக்கப்படக்கூடிய விக்கிரகாராதனை நிறைந்த சமூகத்தில் அவர்களை வளர்க்கும் அறைகூவல் என்பதாக இருந்தது. இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டின் எல்லைப்பகுதியில் இருந்தனர். அது "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்" என்று அழைக்கப்பட்டது, ஆனால் அந்த நாட்டின் சில அம்சங்கள் வாக்குத்தத்தம் என்பதைக் தவிர மற்ற எல்லாமுமாக இருந்தது. உங்கள் குடும்பத்துடன் சென்று பார்க்க ஒரு இடத்தை நீங்கள் தெரிவுசெய்ய வேண்டியிருந்தால், கானான் என்பது உங்களின் முதல் தெரிவாயிராது. அண்டை நாடுகள் இழிநிலையில், சீரழிந்து மற்றும் தேவனற்று இருந்தன.

மோசே கும்பலை எதிர்கொண்டபோது, சூழ்நிலையானது இறுக்கத்தினால் நிறைந்து இருந்திருக்கவேண்டும். ஏற்கனவே ஒரு தலைமுறை வனாந்தரத்தில் இழந்துபோகப்பட்டிருந்தது, மற்றும் அது மீண்டும் நடைபெறக்கூடும். மக்கள் அறிய வேண்டியது என்ன, அவர்கள் விசுவாசிக்க வேண்டியது யாரை மற்றும் அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பவற்றை மோசே அவர்களுக்கு நினைவுபடுத்தினார். அவரது மறுகண்ணோட்டம் உபாகமம் புத்தகத்தில் காணப்படுகிறது.[2] அவரது செய்தியைப் பின்வரும் வார்த்தைகளில் சுருக்கியுரைக்க முடியும்: "நாட்டு மக்களின் வாழ்வுப்பாணியில் பிடிக்கப்பட்டுப்போய் விடாதீர்கள்!"

அதுவே உபாகமம் 6:4-9ல் தரப்பட்ட கட்டளைக்குக் காட்சியமைவாக உள்ளது:

> இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன்

முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப்போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக் கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.

இது யூதமக்களுக்கு, வேதவசனங்களிலேயே மிக முக்கியமான வசனப்பகுதிகளில் ஒன்றாக ஆயிற்று. தொடக்க வசனமானது ஷேமா என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் ‘‘கேள்’’ என்று அர்த்தப்படுகிற ஷேமா என்பது, 4ம் வசனத்தின் தொடக்க வார்த்தையாக இருந்தது. காலம் கடந்தபோது, ஷேமா 9ம் வசனம் வரை விரிவாக்கப்பட்டது, மற்றும் சிலவேளைகளில் இது ஏற்புடைய மற்ற குறிப்புகளையும் உள்ளடக்கியது. இவ்வசனப்பகுதியானது ஆராதனைக்கு அழைத்தல், யுத்தக்கூக்குரல், மற்றும் யூதர்கள் மரிக்கும் வேளையில் செய்யும் ஜெபம் என்பவைகளாக ஆயிற்று. இது யூதத்துவத்தின் மையப்பகுதியாக ஒரு தெய்வக்கொள்கை மற்றும் ஒரே தேவனுடன் மனிதனுக்குள்ள உறவுமுறை ஆகியவற்றின் தலைசிறந்த கூற்றாக ஆயிற்று. இதே கருத்துக்கள் கிறிஸ்தவத்திற்கும் மையக் கருத்தாக உள்ளன (மத்தேயு 22:36-38).

நாம் இவ்வசனப்பகுதியைப் படிக்கையில், இது பெற்றோர்களுக்கு (மற்றும் தாத்தா பாட்டிகளுக்கும்கூட; வசனம் 2) ஒரு அறைகூவலாக இருந்தது (மற்றும் இருக்கிறது) என்ற உண்மையின் பார்வையை இழந்து போகக்கூடாது - இது ஒரு நாடு முழுமைக்குமோ அல்லது மதத்தலைவர்கள் மற்றும் போதகர்களுக்கோ அறைகூவல் அல்ல. குடும்பம் என்பது எதிர்காலத் தலைமுறைகளுக்குப் போதிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய முதல்நிலை முகவராக இருக்கிறது.

இந்தத் தொடரில் நாம், திருமணம் மற்றும் குடும்பம் என்பவற்றிற்குத் தேவனுடைய திட்டங்களைப் பற்றி வலியுறுத்திக்கொண்டுள்ளோம். இந்தப் பாடமும் அடுத்த பாடமும் பெற்றோர்த்துவத்தின் அறைகூவல்கள் மீது கவனம் குவிப்பதாய் இருக்கும். உபாகமம் 6:4-9ஐ நெருக்கமாகக் கண்ணோக்குகையில் நாம் இந்தப் பாடத்தில், ஒரு அஸ்திபாரத்தை இடுகின்றோம், அதை “பெற்றோர்த்துவத்திற்குத் தேவனுடைய முக்கிய திட்டம்” என்று அழைக்கின்றோம்.[3]

## அதை நம்புங்கள் (6:4-6)

பெற்றோர்த்துவத்திற்கான தேவனுடைய திட்டமானது பொருள் ரீதியான வலியுறுத்தத்துடன் அல்ல, ஆனால் ஆவிக்குரிய வலியுறுத்தத்துடன் தொடங்குகிறது: “நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும்

அன்புகூருவாயாக" (வசனம் 5). மேலும், பெற்றோர்த்துவத்திற்கான தேவனுடைய திட்டமானது அவர்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கின்ற பெற்றோர்களுடன் தொடங்குகிறது: "இன்று உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது" (வசனம் 6).

நல்ல பெற்றோர்த்துவத்திற்கு, சரியான வகை நபராயிருப்பதற்கான சரியான நுணுக்கங்களை கற்றுக்கொள்ளுதல் என்பது திறவுகோலாக இருப்பதில்லை. பெற்றோர்த்துவம் பற்றிய வகுப்பு ஒன்றிற்காக நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது, பின்வருவன போன்ற கூற்றுக்களை எழுதினேன்: "நல்ல பெற்றோர்த்துவம் என்பது வாழ்வுப்பாணியில் இருந்து வளருகிறது"; "நமக்கு அது நடக்காத வரைக்கும் நம் மூலமாக எதுவுமே நடக்காது"; "போலிநடிப்புக்காரர் நல்ல பெற்றோர்கள் ஆவதில்லை." நாம் செயல்தாக்கமுள்ள பெற்றோர்களாய் இருக்க வேண்டும் என்றால், நாம் உண்மையானவர்களாக, "மெய்யானவர்களாக" இருக்க வேண்டும். நமது பிள்ளைகள்மீது சரியான வழியில் செல்வாக்குச் செலுத்த, நாம் முதலில் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க வேண்டும்.

நமது வேதபாடப்பகுதி, பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய இரண்டு இன்றியமையாத விஷயங்களை வலியுறுத்துகிறது. முதலாவது, நாம் நம்முடைய இருப்பு எல்லாவற்றுடன் தேவனிடத்தில் அன்புகூரவேண்டும் (வசனம் 5): நாம் நமது முழு இருதயத்துடனும் (நமது உணர்வுகள் மற்றும் சிந்தைகள்), நமது முழு ஆத்துமாவுடனும் (நமது வாழ்வு மற்றும் நமது இருப்பு) மற்றும் நமது முழு பலத்துடனும் (நமது பெலம் மற்றும் நடவடிக்கைகள்) அவர்மீது அன்புகூர வேண்டும். இரண்டாவது, நமது பிள்ளைகளுக்குப் போதிப்பதற்கு, நாம் தேவனுடைய வசனத்தை நமது இருதயங்களுக்கு "உள்ளேயும்" மற்றும் இருதயங்களின் "மீதும்" கொண்டிருக்க வேண்டும் (வசனம் 6). KJV வேதாகமம், "And these words, which I command thee this day, shall be in thine heart" என்று கூறுகிறது (வசனம் 6). தேவனுடைய வசனத்தை நமது இருதயங்களின் "உள்ளே" கொண்டிருப்பதற்கு நாம், அதை வாசித்து, அதைப் படித்து, அதைப்பற்றித் தியானித்து, அதை மனப்பாடம் செய்து, அதை நமது வாழ்வின் அங்கமாக்கிக்கொள்ள வேண்டும். NASB வேதாகமம் "these words, ... shall be *on* your heart" என்று கூறுகிறது. சிலவற்றை நமது இருதயங்களின் "மீது" கொண்டிருத்தல் என்பது, அவை நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அர்த்தப்படுகிறது. வசனத்தைக் குறித்த எண்ணப்போக்கினால் நாம் போதிப்பது போன்றே, வசனத்தைப் படித்து ஒப்பித்தலினாலும் நாம் அதிகமாய் போதிப்போம்.

## அதைப் போதியுங்கள் (6:7)

7ம் வசனம் பெற்றோர் ஒவ்வொருவருக்குமான அறைகூவலைத் தொடருகிறது: "நீ அவைகளை (தேவனால் கட்டளையிடப்பட்ட வசனங்களை) உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப்போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்

கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி.''

நமது பிள்ளைகள், தேவனைப் பற்றியும் அவரது வழியைப் பற்றியும் தாமாகவே அறிந்துகொள்ளமாட்டார்கள்; அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு, அவர்களைச் சுற்றிலும் உள்ள உலகத்தைப் பற்றிய பல உண்மைகள் போதிக்கப்பட வேண்டும்: நெருப்பு சுடுகிறது, கண்ணாடி உடைந்து போகும், மற்றும் மண்ணில் இருந்து பிடுங்கப்பட்ட மலர்கள் மடிந்துபோகும். அதுபோலவே, தேவனுடைய சத்தியங்களும் அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்.

நாம் நமது பிள்ளைகளுக்குக் "கருத்தாய்'' போதிக்கவேண்டும் என்று நமது வேதபாடப்பகுதி நமக்கு கட்டளையிடுகிறது. இவ்வசனப்பகுதியை நேரடி அர்த்தத்தில் மொழிபெயர்த்தால், அது, "நீ அவைகளை உன் பிள்ளைகளில் கூர்மைப்படுத்துவாயாக'' என்று வாசிக்கப்படும். அவர்களுடைய சிந்தைகளில் தேவனுடைய வசனம் கூர்மையாக்கப்பட - தெளிவாக்கப்பட - வேண்டும்; அவர்களின் ஆத்துமாக்கள் அதன் சத்தியத்தினால் ஊடுருவப்பட வேண்டும் (எபிரெயர் 4:12; நடபடிகள் 2:37 ஆகியவற்றைக் காணவும்). அரைமனதுடன் கூடிய எந்த முயற்சியும் இதை நிறைவேற்ற இயலாது. உலகமானது நமது பிள்ளைகளின் சிந்தைகளையும் இருதயங்களையும் அபகரித்துக்கொள்வதற்கு உக்கிரத்துடன் தன்னை ஒப்புக்கொடுத்து இருக்கிறது. நாம் நமது சொந்த போதனைகளில் இதைக்காட்டிலும் அதிக உக்கிரமாய் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் என்ற வகையில், நாம், நமது பிள்ளைகளின் வேதாகம அறிவைப் பெருக்குவதற்கு இருக்கின்ற ஒவ்வொரு ஆதாரமூலத்தையும் அனுகூலப்படுத்திக்கொள்ள வேண்டும்: வேதாகம வகுப்பு, பாடவேளை ஒவ்வொன்றிலும், ஆராதனை ஊழியம் ஒவ்வொன்றிலும், கிறிஸ்தவ இளைஞர்களுக்கான நடவடிக்கை ஒவ்வொன்றிலும் அவர்கள் இருப்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.[4] இந்த வாய்ப்புக்கள் யாவும், நாம் தனிப்பட்ட வகையில் மேற்கொள்ள வேண்டிய போதனைக்குத் துணையாக மாத்திரமே உள்ளன என்பது உண்மையே. தினசரி குடும்ப தியானங்களைக் கொண்டிருத்தல் என்பது நாம் அந்த போதனையைச் செய்யக்கூடிய ஒரு வழிமுறையாக உள்ளது. சிலர், குடும்பமாக மகிழ்ந்திருக்கவும் ஒன்றுகூடியிருக்கவும் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு சிறப்பு குடும்ப இரவு என்பதை திட்டமிடுகின்றனர்.[5]

இருப்பினும், திட்டமிட்ட வேளைகளில் போதித்தல் என்பதல்ல, ஆனால் எல்லா வேளைகளிலும் போதித்தல் என்பதே நமது வேதபாடப்பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது. 7ம் வசனம், "நீ அவைகளை … போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி'' என்று கூறுகிறது. "நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும்'' என்பது உணவு வேளையை உள்ளடக்குவதாக இருக்கும். (உணவு வேளையானது போதிப்பதற்குச் சிறந்த வேளையாக உள்ளது, ஏனென்றால் அது சிரத்தையுடன் கேட்பவர்களை அளிக்கிறது:

சீக்கிரம்போய்விட ஆவலாயிருக்கும், மிகவும் பசியாய் இருக்கின்ற பிள்ளைகள்!)[6]

வேதபாடப்பகுதியானது, "வழியில் நடக்கிறபோதும்" போதித்தல் பற்றியும் பேசுகிறது. அந்த நாட்களில், குடும்பத்தினர் ஒன்றுகூடி நீண்ட தூரங்கள் அடிக்கடி நடந்து சென்றனர். சில குடும்பங்கள் இன்னமும் நீண்ட நடைகளை ஒன்றுகூடி மேற்கொள்கின்றனர். அது போதிப்பதற்கு மிகச்சிறந்த நேரமாக உள்ளது. நாம் நடந்து பயணம் சென்றாலும், காரிலோ அல்லது வேறு ஏதேனும் வாகனத்திலோ பயணம் சென்றாலும், நமது பயண நேரம் ஒரு படபடக்கும் நேரமாக இருக்கக்கூடும் அல்லது நமது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளும் நேரமாக இருக்கக்கூடும்.[7]

"வழியில் நடக்கிறபோதும்" போதித்தல் என்பதுடன் இன்னொரு சிந்தனையும் கூட்டப்பட வேண்டும்: நாம் நமது விசுவாசத்தை நடைமுறை வழிகளில் வெளிப்படுத்தும்போது - நோயாளிகளுக்கு உணவு எடுத்துச்செல்லும்போது, மருத்துவமனைக்குச் செல்லும்போது, துக்கத்தில் விடப்பட்டவர்களைப் பார்க்கச் செல்லும்போது - நமது பிள்ளைகளையும் நம்முடன் கூட்டிச்செல்ல வேண்டும்.

"படுத்துக் கொள்ளுகிறபோதும்" என்பது படுக்கை வேளையாய் இருக்கும். படுக்கை வேளை என்பது பல பிள்ளைகளுக்குச் சிறப்பான வேளையாக இருக்கிறது. நாளின் அந்த வேளையில் அவர்கள் குறிப்பாக, போதித்தலுக்கும் கலந்துரையாடுதலுக்கும் திறந்தமனதுடன் இருக்கலாம். அது "ஒரு மென்மையான தருணமாக" இருக்கக்கூடும்.[8]

கடைசியாக, பெற்றோர்கள் "எழுந்திருக்கிறபோதும்" - காலையிலும் மற்றும் காலை உணவு வேளையிலும் - போதிக்கும்படி அறைகூவல் விடப்படுகின்றனர். இது ஒவ்வொரு புதிய நாளையும் எவ்வாறு தொடங்குவது என்று பிள்ளைகளுக்குப் போதிப்பதற்கு மிகச்சிறந்த வேளையாக உள்ளது.

பெற்றோர் எந்த வேளையிலும் மற்றும் எல்லா வேளையிலும் போதிக்க வேண்டும் என்பதே உபாகமம் 6:4-9ன் கொள்கையாக உள்ளது. நமது இருதயங்களில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும் அன்பையும் நமது பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்வதற்குச் சாத்தியமான ஒவ்வொரு கணத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமது வாழ்வானது, "மதம்," "வேலை," "விளையாட்டு," மற்றும் இன்ன பிறவிஷயங்களாக பிரிவுபட்டிருக்கக் கூடாது; நமது போதனையானது "நமது அன்றாட வாழ்வு என்ற துணியில் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும்." எந்த கணமும், எந்த நிகழ்ச்சியும், எந்த இடமும் பகிர்ந்து கொள்ளுதலுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கக்கூடும்: ஒரு வானவியல், தீர்மானிக்க வேண்டிய வேளை, சமூகத்தில் ஒரு பிறப்பு அல்லது இறப்பு. ஜான் M. டிரெஷர் என்பவர், தாம் மீண்டும் தமது குடும்ப வாழ்வைத் தொடங்க வேண்டியிருந்தால், தமது பிள்ளைகளுடன் தேவனைப் பற்றி இன்னும் நெருக்கமாகப் பகிர்ந்து கொள்வதை நாடுவேன் என்பதாகக் கூறினார்:

> நான் என் பிள்ளையுடன் ஒவ்வொரு நாளிலும் சூரியன்

மறையும்போது அரைமணி நேரம், தேவன் தாம் தேர்ந்தெடுக்கும் அழகுமிகு வண்ணங்களைக் கொண்டு ஒரு புதிய படத்தைத் தீட்டி அதற்குச் சட்டமிடுகின்றார் என்பதைக் கவனிப்பேன் ... மாலையின் ஈரமான வேளையில், ஒவ்வொரு இலையையும் பசுமையான குளிர்ந்த நீரில் முழுக்காட்டியது போன்று தேவன் ஆக்குவது எப்படி என்று கவனிப்பேன். நான் என் பிள்ளையுடன், தேவன் எவ்வாறு நட்சத்திரங்களைக் கொண்டு ஆகாயத்தில் ஒளியூட்டுக்கின்றார் மற்றும் அவர் இருளின் போது உலகத்தை எவ்வாறு காணக்கூடிய வகையில் மறுமுறை சிருஷ்டிக்கின்றார், எல்லா படைப்புகளையும் ஒவ்வொரு புதிய நாளுக்காகவும் எவ்வாறு ஆயத்தப்படுத்துகின்றார் என்று கவனிப்பேன் ... .

பின்பு நாங்கள் பாசியினால் வண்ணந்தீட்டப்பட்ட பாறைகளைக் கண்ணோக்கி, நமது பிதாவின் பறவைகளுடைய பாடலைக் கேட்போம் ... எனது பிதாவின் மலர்களைக் கொய்வதற்காகவும் மாபெரும் சிருஷ்டிகரின் சிருஷ்டிகளில் சிறியவற்றையும் பெரியவற்றையும் கண்ணோக்குவதற்காகவும், நான் ஏதேனும் நீரோடை அருகே தளர்நடையிட அதிகமாய் நாடுவேன் ... கோடைகாலத்தில் தூங்கும்பைகளைச் சுமந்தபடி, தேவனுடைய ஆகாயத்தின்கீழ் நானும் எனது குடும்பத்தாரும் படுத்துக்கிடந்து நட்சத்திரங்களுடன் பேசவும், இயற்கையின் ஒலியையும், மரங்களில் காற்றின் சீழ்க்கையையும், காணமுடியாத சிற்றுயிர்களின் சிறிய சப்தங்களைக் கேட்கவும் அதிக நேரத்தைக் கண்டறிவேன். எனது பிள்ளைக்கு, அவனது கேடகங்களையும் தெரிவுப்பொருட்களையும் வைப்பதற்கு அலமாரிகளையும் மேஜை இழுப்பறைகளையும் நான் தருவேன்.[9]

நாம் நமது பிள்ளைகளுடன் இருக்கையில், "போதிக்கக்கூடிய தருணங்களுக்காக" கண்ணோக்க வேண்டும். "கற்றுக்கொள்ளுதலின் விதிகள்" என்று அழைக்கப்படக்கூடியவைகளில், "ஆயத்தமாயிருத்தலின் விதி" என்ற ஒன்றும் உள்ளது. ஒரு பிள்ளை, நாம் போதிக்க ஆயத்த மாய் இருக்கும் பொழுதில் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், அவன்/அவள் கற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கையில் அதிக ஏராளமாகக் கற்றுக்கொள்வான்(ள்) என்று "விதி" கூறுகிறது. புரூஸ் நாரமோர் என்பவர் அப்படிப்பட்ட "போதிக்கக்கூடிய தருணங்கள்" பற்றி பின்வருமாறு எழுதினார்:

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, நானும் எனது மகனும் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தோம்.

"அப்பா, தேவன் களைகளைச் சிருஷ்டித்தாரா?" என்று டிக்கி திகைப்புடன் கேட்டான்.

நான் எனது வேலையைத் தொடர்ந்து செய்வதற்காக ஒரு விரைவான பதிலை ஏற்படுத்தத் தொடங்கினேன், ஆனால் பின்பு நான், இது ஒரு ஆவிக்குரிய பாடத்தைப் போதிப்பதற்கான வாய்ப்பாக இருந்தது என்று நான் உணர்ந்தறிந்தேன்.

நான் எனது களையெடுக்கும் கருவியை கீழே வைத்துவிட்டு, “டிக்கி, உனக்கு ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரைப்பற்றித் தெரியும். அவர்கள்தான் இந்த பூமியில் வாழ்ந்த முதல் மனிதர்களாய் இருந்தனர். தேவன் அவர்களைக் களைகள் எதுவும் இல்லாத ஒரு அழகிய தோட்டத்தில் வைத்திருந்தார். பின்பு ஒருநாள் பிசாசானவன் வந்தான், அவன் பார்ப்பதற்குப் பாம்புபோல் இருந்தான். அவன் ஆதாமையும் ஏவாளையும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்படி கூறினான், அவர்கள் உண்ணக்கூடாது என்று தேவன் கூறியிருந்த கனியை அவர்கள் உண்ணவேண்டும் என்று அவன் கூறினான். என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா? அவர்கள் அதை உண்டார்கள். பின்பு உலகத்தில் பிரச்சினைகள் உண்டாகத் தொடங்கிற்று. ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபின்பு, களைகள் முளைக்க தொடங்கின மற்றும் அவர்கள் தங்களின் அழகு-மிகுந்த தோட்டத்தைவிட்டு வெளியேறி வேலைசெய்யப் போக வேண்டியதாயிற்று” என்று கூறினேன்.

டிக்கி ஒரு ஆழமான பார்வையுடன், “அது ஒரு வெட்கக்கேடான விஷயமல்லவா?” என்று பதில் அளித்தான்.[10]

நாம் நமது பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்ட முயற்சிசெய்ய முடியும், ஆனால் அந்த “போதிக்கக் கூடிய தருணங்கள்” எப்போது எழும்பும் - நமது பிள்ளைகள் எப்போது கேள்வி எழுப்பும், அவர்கள் கற்றுக்கொள்வதற்கு எப்போது ஆயத்தமாகவும் ஆர்வத்துடனும் இருப்பார்கள் - என்று நாம் எப்போதுமே முன் அனுமானம் செய்யமுடியாது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்கக்கூடியவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு முக்கியமான காரணமாக உள்ளது.

நமது பிள்ளைகளின் வாழ்வின் முந்திய பிராயத்திலேயே போதித்தலைத் தொடங்குதலும் இன்றியமையாததாக உள்ளது. விலங்குகள் மற்றும் பறவைகளிடத்தில் நடைபெறுகிறதான, “(மனதில்) பதிதல்” என்ற இயல்பான கோட்பாடு பற்றி அறிவியல் அறிஞர்கள் உரைக்கின்றனர். பெரும்பாலான மிருகங்களும் பறவைகளும் பிறந்த சற்று நேரத்திலேயே தங்களுக்கு அருகில் அவைகள் காணும் வகையில் நகருகின்ற முதல் உயிரினத்துடன் ஒன்றி விடுகின்றன (அல்லது “மனதில் பதித்துக் கொள்கின்றன”). வழக்கமாக அந்த உயிரினம் அதன் தாயாகவே இருக்கும், ஆனால் அது வேறு ஏதாவதாகவும் இருக்கக்கூடும்: அது ஒரு மனிதராகவோ அல்லது ஒரு கயிற்றைக் கொண்டு இழுக்கப்படுவதாகவோ கூட இருக்கலாம். இந்த “மனதில் பதிதல்” என்பது பிறந்த ஒருசில கணங்களிலேயே நடைபெற்றுவிடுகிறது;[11] அதன்பின்பு அந்த வாய்ப்பு ஒருபோதும் கிடைக்காதபடி கடந்து சென்று விடுகிறது. அவ்வாறே, நாம் நமது பிள்ளைகளுக்கு கூடிய வரையில் அவர்களின் “பிஞ்சுப் பருவத்திலேயே” - போதிக்கத் தொடங்காவிட்டால் அந்த வாய்ப்பானது என்றென்றைக்குமாக இழந்துபோகப்படக்கூடும்.

நாம் நமது பிள்ளைகளுக்குப் போதிக்கின்ற சில உண்மைகளை அவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள், ஆனால் அவர்கள் பெரும்பாலும்

*நமது எண்ணப்போக்குகளையே நினைவில் வைத்திருப்பார்கள். முந்தியபாடம் ஒன்றில் குறிப்பிடப்பட்ட பின்வரும் சிந்தனையை நாம் அவர்கள் மனதில் பதியவைத்து இருந்தால், நம்மையே நாம் வெற்றிகரமான வர்களாக எண்ணலாம்: "நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதால் தான் நாம் செய்கின்றவைகளைச் செய்கின்றோம் - நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்குக் காரணம், நாம் நம்புகின்ற விஷயங்கள்தான்."*

## *அதை வாழ்ந்து காண்பியுங்கள் (6:8, 9)*

*மோசே, இஸ்ரவேல் மக்களுக்குத் தெய்வீக நியதிகளைப் போதித்தபின்பு, "அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலையிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக" என்று கூறினார் (வசனங்கள் 8, 9).*

*காலம் கடந்த பின்பு, யூதர்கள் "பைலேக்டெரீஸ்"[12] என்று அழைக்கப்பட்ட சிறுபெட்டிகளை வடிவமைத்தனர். இவைகள் நல்லதிர்ஷ்டக் குறிகளின் ஒரு வகையாக, குறிப்பிட்ட வைபவங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவர்கள் ஒரு பெட்டியை கையின்மீது வைத்து அதைச்சுற்றிக் கட்டும் கயிறுகளை கொண்டு இறுக்கிக்கொண்டனர், எனவே கையை மடிக்கும்போது, அந்தப் பெட்டியானது இருதயத்திற்கு அருகில் இருக்கும். மேலும் அவர்கள் தங்கள் நெற்றியிலும் ஒரு பெட்டியை வைத்துக்கொண்டனர். இந்தப் பெட்டிகளைக் கட்டும் கயிறுகள், எபிரெய எழுத்துக்களை உண்டாக்கும் வகையில் முடிச்சுப் போடப்பட்டன. பின்பு அவர்கள் தங்கள் வீடுகளின் கதவுநிலைகளில் சிறுபெட்டிகளை வைத்தனர். பழமைவாத யூதர்கள் இன்றைய நாட்களிலும் இதைச் செய்து கொண்டுள்ளனர். அந்தப் பெட்டிக்குள், உபாகமம் 6 (அத்துடன் மற்ற வசனங்களும்) எபிரெய மொழியில் எழுதப்பட்ட துண்டுத்தாள் இருக்கும். பக்தியுள்ள யூதர்கள் (மெசூசா என்று அழைக்கப்படுகிற) அந்தப் பெட்டியைக் கடந்து செல்லும் ஒவ்வொருமுறையும் அதைத் தொடுகின்றார்; அவர் தமது விரல்களை முத்திசெய்து சங்கீதம் 121:8ஐ எபிரெய மொழியில் உச்சாடனம் செய்யலாம்: "கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்."*

*இதைத்தான் தேவன் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? வேதவசனங்கள் எழுதப்பட்ட துண்டுத் தாள்களை எடுத்துச் செல் லுதலிலோ அல்லது அப்படிப்பட்ட நினைவூட்டும் பொருட்களை உங்கள் இல்லத்தில் வைத்திருத்தலிலோ எவ்விதத் தவறும் இல்லை என்பது உறுதி. சில மனிதர்கள் நாள்முழுவதிலும் தங்களுக்கு உதவும் என்று நினைக்கின்ற வசனப்பகுதிகள் எழுதப்பட்ட, 3" X 5" அளவுள்ள அட்டைகளைத் தங்கள் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு செல் வதை நான் அறிந்திருக்கின்றேன். கைகழுவும் தொட்டிக்கு மேலே உள்ள சுவர்ப்பகுதிகளில் வேதாகமத்தின் வசனப்பகுதிகள் சிலவற்றை தெளிவாய்த் தெரியும்படி ஒட்டிவைக்கும் அல்லது, குளிர்பதனப்பெட்டியின் கதவில் "இன்றைய நாளுக்கான வேதாகம சிந்தனை" என்பதை ஒட்டிவைக்கும்*

பெண்மணிகளை நான் அறிந்துள்ளேன். இருப்பினும் உபாகமம் 6:8, 9ல் கர்த்தர் இஸ்ரவேல் மக்களிடம் சிறுபெட்டிகளைச் செய்து அவற்றை எல்லா இடங்களிலும் ஒட்டிவைக்கும்படி அறிவுறுத்தினாரா என்பதில் எனக்கு ஐயம் உள்ளது. இப்படிப்பட்ட நேரடியான அர்த்தம்கொள்ளுதலைப் பிற்பாடு இயேசு, மத்தேயு 23:5ல் பின்வருமாறு கடிந்துரைத்தார்: "தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கின்றார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல் களைப் பெரிதாக்கி ... ." பரிசேயர்கள் பின்வருமாறு பெருமையுடன் கூறியிருப்பார்கள் என்பது உறுதி: "எங்கள் பெட்டிகள் உங்கள் பெட்டிகளைவிடப் பெரியவைகளாக உள்ளன, எங்கள் தோல்நாடாக்கள் உங்கள் தோல்நாடாக்களைவிட அகலமாக உள்ளன, எனவே நாங்கள் உங்களைவிட அதிக பக்தியுள்ளவர்கள்!"

மாறாக, தேவன், 8 மற்றும் 9ம் வசனங்களில், கலந்துரையாடப்படுகிற தெய்வீக சத்தியங்கள் நமது இருப்பின் அங்கமாக வேண்டும் என்று கூறினாரா? நமது கைகள் வேலை செய்கிற ஒவ்வொரு முறையும் அவைகள் தேவன் இயக்குகின்றபடியே செயல்படும் வகையில் நாம், "அவற்றை நமது கைகளில் கட்டிக்கொள்ள வேண்டும்." நாம் சிந்திக்கும் ஒவ்வொரு முறையும் தேவன் நம்மிடம் விரும்புகின்றபடியே நாம் சிந்திக்கும் வகையில் நாம், "அவற்றை நமது நெற்றிகளில் கட்டிக்கொள்ள வேண்டும்." தேவனுடைய கொள்கைகள் நமது குடும்பங்களை நிரப்பும் வகையில் நாம் "அவற்றை நமது நெற்றிகளில் கட்டிக்கொள்ள வேண்டும்." தேவனுடைய கொள்கைகள் நமது குடும்பங்களை நிரப்பும் வகையில் நாம் "அவற்றை நமது கதவுநிலைகளில் கட்டிவைக்க வேண்டும்."

பெற்றோர்த்துவத்திற்கான தேவனுடைய திட்டமானது பெற்றோருடைய உதாரணத்துடன் தொடங்கி பெற்றோருடைய உதாரணத்துடனே முடிகிறது. இந்த உதாரணமானது, "வெட்டும் முனைக்கு (பெற்றோரின் போதனைக்கு) வலுவூட்டும் வகையிலான கோடரியின் எடையாக" உள்ளது.[13] புரூஸ் நாரமோர் என்பவர் சகபெற்றோர்களுக்கு, "பிள்ளைகள் வேறு எந்த ஆதாரமூலத்தில் இருந்து கற்றுக்கொள்வதைப் பார்க்கிலும் மிக அதிகமாக, நமது நடக்கையில் இருந்து கற்றுக் கொள்கின்றனர்" என்று கூறினார்.[14] சார்லஸ் ஸ்வின்டால் என்பவர் இதைப் பின்வருமாறு உரைத்தார்: "பெற்றோரின் கைரேகைகள் அவர்களின் சந்ததிகளினுடைய வாழ்வுமுழுவதிலும் பதியப்படுகிறது."[15] ஜேம்ஸ் டோப்ஸன் என்பவர் பின்வரும் கூற்றை மேற்கோள் காண்பித்தார்: "ஒரு பிள்ளை பின்தொடர்ந்து செல்லும் காலடித்தடங்கள், பெரும்பாலும் அவனுடைய பெற்றோர் தாங்கள் மூடிவிட்டதாக நினைத்திருந்த அவர்களின் அடிச்சுவடுகளே ஆகும்."[16]

"குரங்கு பார்க்கிறது, குரங்கு [அதையே] செய்கிறது" என்ற பழைய கூற்றொன்றை நீங்கள் அனேகமாகக் கேள்விப்பட்டிருக்கலாம். முனைவர் லோகன் ரைட் என்பவர் இந்த "குரங்குக் கொள்கையானது" குரங்குகளுக்கும் பிள்ளைகளுக்கும் நடைமுறைப்படுகிறது என்று கூறினார்:

... ஒரு குரங்கிற்கு, உலர்ந்த திராட்சையைப் பெற ஒரு பெட்டியைத் திறக்கும்படி பயிற்றுவிக்கப்பட்டது. மற்ற குரங்குகள் இந்த செயல்விளக்கத்தைக் கவனித்தன, அவைகளுக்கு இதேபோன்ற பிரச்சனைக்கான வாய்ப்பு ஒன்று தரப்பட்டது. பெரும்பாலான நிகழ்வுகளில் குரங்குகள் பெட்டியை விரைவாகத் திறந்து உலர்ந்த திராட்சையைப் பெற்றுக்கொண்டன, அதேவேளையில் இந்தத்தீர்வைக் கவனிக்க வாய்ப்புப் பெற்றிராத மற்ற குரங்குகள் அவ்வளவு விரைவாகச் செயல்படவில்லை. பிள்ளைகளிடம் நடத்தப்பட்ட ஆராய்ச்சியும் இதேபோன்ற விளைவுகளைக் கொடுத்தன. ...

ஒரு ஆராய்ச்சிப்படிப்பில், பிள்ளைகள் விளையாட்டுச் சாமானுடன் விளையாடுகையில், ஒரு வளர்ந்த மனிதன் விளையாடுகையில் ஒரு பெரிய போபோ பொம்மையைத் தாக்கினான். இந்தப் பிள்ளைகளுக்கு பொம்மையுடன் விளையாட வாய்ப்புக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் அதனுடன் விளையாடியதோடு, அந்த வளர்ந்த மனிதன் செய்ததுபோன்றே அவர்களும் செய்தனர்: அவர்கள் அதன்மீது உட்கார்ந்தனர், அதை உதைத்தனர், அதை ஆகாயத்தில் எறிந்தனர், அவ்வாறு செய்கையில், வளர்ந்த மனிதன் சொன்ன அதே விளக்கங்களை அவர்களும் சொன்னார்கள்.[17]

பெற்றோர்கள் என்ற வகையில், எல்லா வேளைகளிலும் நாம் செய்கின்றவற்றினால், நாம் கூறுகின்றவற்றினால், மற்றும் நாம் இருக்கும் வகையினால் - அதை நாம் உணர்ந்தாலும் இல்லை யென்றாலும் - போதிக்கின்றோம். பிறருடைய உடைமையை நாம் தவறுதலாகச் சேதப்படுத்தும்போது, சேதத்திற்கான நமது பொறுப்பை ஒப்புக்கொள்ளாமல் நழுவிவிட்டால், நாம் பொன்விதி பற்றிய ஒரு பாடத்தைப் போதிக்கின்றோம் (மத்தேயு 7:12).[18] நாம் நமது வருமான வரியை எவ்வாறு ஏமாற்றினோம் என்பதையோ அல்லது ஒரு வியாபார விஷயத்தில் இன்னொருவரை நாம் எவ்வாறு அனுகூலப்படுத்திக் கொண்டோம் என்பதையோ நாம் பெருமையாகக் கூறிக்கொண்டால், நேர்மையைப் பற்றிய பாடம் ஒன்றை (2 கொரிந்தியர் 8:21) நாம் போதிக்கின்றோம். நாம் ஆராதனைக்குச் செல்லவில்லையென்றாலோ, அல்லது வேண்டா வெறுப்பாக ஆராதனையில் கலந்துகொண்டாலோ, சபைக்கு வருதல் பற்றிய பாடம் ஒன்றை நாம் போதிக்கின்றோம் (எபிரெயர் 10:25). அலுவலர்கள் கவனிக்கவில்லை என்று நாம் அறியும்போது, சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், குடிமகனின் கடமை பற்றிய பாடம் ஒன்றை நாம் போதிக்கின்றோம் (ரோமர் 13:1).

நமது உதாரணங்களில் இருந்து நமது பிள்ளைகள், வாழ்விற்குத் தேவையான மதிப்புமிக்க பாடங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்கின்றனர்: சச்சரவைத் தீர்த்துவைப்பது எப்படி, ஏமாற்றத்தையும் மன உளச்சலையும் எதிர்கொள்வது எப்படி, கோபம் மற்றும் விரக்தியைக் கையாள்வது எப்படி, போதைமருந்துகளைச் சார்ந்திராமல் வாழ்வின் பிரச்சனைகளைச் சமாளிப்பது எப்படி, மற்றும் உணர்வை வெளிப்படுத்துவது எப்படி என்பன போன்றவை.

*"பிள்ளைகள் தாங்கள் வாழ்பவற்றையேக் கற்றுக்கொள்கின்றனர்" என்ற பாடல் உங்களுக்குப் பழக்கமானதாக இருக்கலாம், ஆனால் இவ்விடத்தில் அதைத் திருப்பிக்கூறுதல் தகுதியானதாக உள்ளது:*

*விமர்சிக்கப்படுதலில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*கண்டனம்பண்ணக் கற்கின்றான்.*
*வெறுப்புணர்வில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*சண்டையிடக் கற்கின்றான்.*
*பயத்தோடு ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*கவலையோடிருக்கக் கற்கின்றான்.*
*இரக்கத்தில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*தன்னைப்பற்றியே பரிதாபப்படக் கற்கின்றான்.*
*பொறாமையோடு ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*குற்ற உணர்வைக் கற்கின்றான்.*
*உற்சாகப்படுத்துதலில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*தன்னம்பிக்கையைக் கற்கின்றான்.*
*சகிப்புத்தன்மையோடு ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*பொறுமையாய் இருக்கக் கற்கின்றான்.*
*புகழ்ச்சியில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*மதித்திருக்கக் கற்கின்றான்.*
*ஏற்றுக்கொள்ளப்படுதலில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*நேசிக்கக் கற்கின்றான்.*
*அங்கீகரிக்கப்படுதலில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*தன்னைப்போலிருக்கக் கற்கின்றான்.*
*உணர்ந்தறியப்படுதலில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*இலக்கைக் கொண்டிருத்தல் நன்று என கற்கின்றான்.*
*நியாயத்தில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*நீதியென்றால் என்ன என்று கற்கின்றான்.*
*நேர்மையுடன் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*உண்மையென்றால் என்ன என்று கற்கின்றான்.*
*பாதுகாப்பில் ஒரு பிள்ளை வாழ்ந்தால்,*
*தன்னிலும் பிறரிலும் நம்பிக்கையாயிருக்கக் கற்கின்றான்.*
*நட்புறவில் ஒரு பிள்ளை வாழ்ந்தால், உலகம் என்பது*
*வாழ்வதற்கான ஒரு நல்லிடம் என்று கற்கின்றான்.*[19]

*நம் பிள்ளைகள், நம் வாழ்வால் செல்வாக்கு செலுத்தப்படுவது மாத்திரமல்ல, ஆனால் அந்த செல்வாக்கு - நன்மைக்கும் அல்லது தீமைக்கும் - தொடர்ந்து ஜீவிக்கும். யாத்திராகமம் 20:4-6ல் தெளிவான சத்தியமொன்று காணப்படுகிறது: நாம் ஒரு விக்கிரகத்தை உண்டாக்கவோ, ஆராதிக்கவோ அல்லது சேவிக்கவோ கூடாது என்று வலியுறுத்தியபின்பு, கர்த்தர் தாம், "பிதாக்களின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராய் இருக்கின்றேன்" என்று கூறினார் (வசனம் 5). "மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும்" அவர்களுடைய பிதாக்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்படுவார்கள் என்று தேவன் கூறியது ஏன்? ஏனென்றால் அவ்வளவு வரைக்கும் ஒரு பெற்றோரின் செல்*

வாக்கு ஒழியாதிருக்கிறது! விஷயம் இவ்வாறு உள்ளது என்பதை எண்ணற்ற படிப்பாய்வுகள் காண்பித்துள்ளன, ஆனால் சமூகவியல் அறிஞர்கள் இதை "கண்டறிவதற்கு" நீண்ட காலத்திற்கு முன்பே வேதாகமம் இதைப் போதித்துள்ளது. இங்கு ஒரு உதாரணம் உள்ளது: பல வேளைகளில் ஆபிரகாம் தமது உயிரைக் காத்துக்கொள்வதற்காகப் பொய் கூறியிருந்தார் (ஆதியாகமம் 12:10-13; 20:1-5). பிற்பாடு அவரது மகன் ஈசாக்கும் ஏறக்குறைய அதேபோன்ற பொய்யைக் கூறினார் (ஆதியாகமம் 26:6-11). ஆபிரகாமின் பேரப்பிள்ளைகளில் (மூன்றாம் தலைமுறை) ஒருவரான யாக்கோபு, "வஞ்சிப்பவன்" அல்லது "தந்திரக்காரன்" (ஆதியாகமம் 27:1-19) என்று அறியப்பட்டிருந்தார். யாக்கோபு வயது முதிர்ந்தவரானபோது, அவரது மகன்கள் (நான்காம் தலைமுறையினர்) என்ன செய்தனர் என்று கற்பனை செய்து பாருங்கள்? அவர்கள் தங்கள் தந்தையிடத்தில் பொய்கூறி அவரையே வஞ்சித்தனர் (ஆதியாகமம் 37).[20]

## முடிவுரை

நமது பிள்ளைகள் தேவனுடைய வழியைப் பின்பற்றவேண்டும் என்று நாம் விரும்பினால், அதை (தேவனுடைய வழியை) நாம் நம்பி, அதைப்போதித்து, அதை வாழ்ந்துகாண்பிக்க வேண்டும் என்று உபாகமம் 6:4-9 போதிக்கிறது. பெற்றோர்கள் சீரான வாழ்வை - உண்மையான மற்றும் மெய் யான கிறிஸ்தவ வாழ்வை - வாழ்வதற்கான அவசியம்பற்றி வலியுறுத்த நாம் முயற்சி செய்துள்ளோம். யாரோ ஒருவர், "பெற்றோர்த்துவ உதாரணம் என்ற எண்ணெயானது பெற்றோர்த்துவ அறிவுறுத்தல் என்பதில் உள்ள அதிகமான உராய்ப்பை நீக்க உதவுகிறது" என்று கூறியுள்ளார்.

"கோணலும் மாறுபாடுமான சந்ததியின் மத்தியில்" நமது பிள்ளைகள் "சுடர்களாக" இருக்க வேண்டுமென்று போதிப்பதைக் காட்டிலும் பெரிதான அறைகூவல் ஒன்றை என்னால் கற்பனை செய்துகாண இயலவில்லை (பிலிப்பியர் 2:15). ஒவ்வொரு பெற்றோருடனும் தேவன் இருப்பாராக![21]

---

குறிப்புகள்

[1]பிலிப்பியர் 4:13ஐக் காணவும். [2]"உபாகமம்" என்பது "இரண்டாவது பிரமாணம்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது, ஆனால் இது "பிரமா ணத்தை இரண்டாம்முறை கொடுத்தல்" என்பதை - அதாவது பிரமாணத்தை மீண்டும் கூறுதலைக் குறிக்கிறது. [3]பெற்றோர்த்துவத்தைப் பற்றி ஒரு வகுப்பில் போதிக்கையில், எனது பின்னணிப் படிப்புகள் பழைய ஏற்பாட்டில் இருந்து வருவதாயிருக்கின்றன: உபாகமம் 6 மற்றும் நீதிமொழிகள் 22. பின்பு நான், எபேசியர் 6 மற்றும் கொலோசெயர் 3 போன்ற புதிய ஏற்பாட்டு பகுதிகளுக்குச் செல்வதுண்டு. இந்தப் புத்தகத்தில் நாம் இரண்டு பின்னணிப்பாடங்களுக்கு மாத் திரமே இடம் பெற்றிருக்கின்றோம். [4]நீங்கள் இங்கு கிடைக்கக்கூடிய பயனுள்ள நடவடிக்கைகளைப் பட்டியலிட விரும்பலாம், நாம் வேதாகம முகாம்களை, கிறிஸ்தவப் பள்ளிகளை மற்றும் இவைபோன்றவற்றைப் பெறமுடிகிறது. [5]ஜேம்ஸ்

டோப்ஸன் என்பவர், இப்படிப்பட்ட இரவில், குடும்பத்தின் மதிப்புகளை எழுதிவைத்து அவற்றை நமது பிள்ளைகள் மனப்பாடம் செய்யும்படி கூறுதல் ஒரு நல்ல பயிற்சியாய் இருக்கும் என்று கருத்துத் தெரிவித்தார். [6]நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்புடையது என்றால், நீங்கள் "காலத்தின் உள்ள ஒற்றைக்கண் திருடனை"ப்பற்றிய எச்சரிக்கையை உள்ளடக்க விரும்பலாம்: அது தொலைக்காட்சிப்பெட்டி என்பதாக உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னதாக இருந்துகொண்டு உணவு உண்ணுதலானது செய்தித்தொடர்பையும் போதிப்பதற்கான எந்த ஒரு வாய்ப்பையும் இருந்துஅழித்துப்போடக்கூடும். [7]எனது குடும்பத்திற்கு, இது சுவிசேஷப்பாடல்களைப் பாடுவதற்குப் பிரியமான நேரமாயிருந்தது. [8]எனது சிந்தையானது, எனது இளைய மகளை நான் தூங்கச் செய்யும்போது, அவளும் நானும் கொண்டிருந்த நீண்ட உரையாடல்களை நோக்கிப்பின் செல்லுகிறது. ஒருவேளை அது, அவள் உறங்க ஆயத்தமாகவில்லை என்பதால் நடந்திருக்கலாம், ஆனால் அது பகிர்வுக்கான ஒரு விசேஷித்த நேரமாகவும் இருந்தது. [9]Quoted by Harold Hazelip in *Happiness in the Home* (Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 35. தேவனைப்பற்றிப் பேசுவதற்கு இயற்கையான சூழ்நிலை என்பது ஒரு மாபெரும் தொடக்க இடமாக உள்ளது (சங்கீதம் 19:1, 2; நீதிமொழிகள் 6:6; 30:18, 19, 26-28; மத்தேயு 6:19, 20, 26, 28, 30; 7:6, 16-20; 10:29; 13:1-9, 24-30; லூக்கா 15:3-7). பிள்ளைகள் இயல்பாகவே. "யார் இதை உண்டாக்கினார்?" என்று கேட்கின்றனர். [10]Bruce Narramore, *Parenting With Love & Limits* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1979), 64.

[11]"மனதில் பதிதலின்" கோட்பாடு பற்றி அறிவியல் அறிஞர்கள் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ளனர், இதனால் குழந்தைப் பிறப்பைக் கவனிக்கும் பெரும்பாலான மருத்துவர்கள், புதிதாய் பிறந்த பச்சிளம் குழந்தைகளைக் கூடியவரையில் விரைவாக அவர்களின் தாய்மார்களுடைய கரங்களில் கொடுக்கும் நடைமுறைக்குத் திரும்பியுள்ளனர். (இது அடிக்கடி, "பிணைத்தல்" என்று அழைக்கப்படுகிறது.) [12]"பைலேக்டரி" என்பது "காப்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளதாய் இருக்கிறது. தேவன் இஸ்ரவேல் மக்களைத் தமது பலத்த கரத்தினால் எகிப்தில் இருந்து புறப்படப்பண்ணினார் என்ற உண்மையானது அவர்களின் கைகளில் "அடையாளமாக" மற்றும் அவர்களின் நெற்றிகளில் "பேலேக்டரிகள்" (காப்புகள்) என்பவையாக இருக்க வேண்டியிருந்தது (KJV வேதாகமத்தில் "phylacteries" என்பதற்குப்பதிலாக "frontlets" என்றுள்ளது; யாத்திராகமம் 13:16). இந்த சத்தியத்தின் அடிப்படையிலான அவர்களின் விசுவாசம் அவர்களை வழிநடத்தி, பாதுகாக்க வேண்டியிருந்தது; அது அவர்களின் உடல்களில் சிறு பெட்டிகளைக் கட்டிக்கொள்ளுதல் பற்றி ஒன்றும் செய்வதற்கில்லை என்ற நிலையில் இருந்தது. [13]பவுலின் வாழ்வு, போதித்தலின் கொள்கையை உதாரணத்தினால் விவரிக்கிறது (பிலிப்பியர் 4:9ஐக் காணவும்). [14]Bruce Narramore, *Help! I'm a Parent* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, *1972), 60.* [15]Charles Swindoll, *You and Your Child* (New York: Thomas Nelson Publishers, 1977), 87, [16]Quoted in James Dobson, *The Strong-Willed Child* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1978), 56. [17]Logan Wright, *Parent Power: A Guide to Responsible Childrearing* (New York: Psychological Dimensions, 1978), 32. [18]இங்கு தரப்பட்டுள்ள பாடங்கள் தவறான வகையிலான - மோசமான உதாரணங்களான - பாடங்களாய் இருக்கின்றன. அவசியமென்றால் நீங்கள் இவற்றைத் தெளிவானவைகளாக்கிக் கொள்ளலாம். [19]Author unknown. Quoted by Carl Brecheen and Paul Faulkner, *What Every Family Needs or Whatever Happened to Mom, Dad, & the Kids?* (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 147. [20]யெரொபெயாமின் வாழ்வு இன்னொரு எதிர்மறை உதாரணமாக உள்ளது. இஸ்ரவேல் அரசர்களின்

*நாளாகமத்தில், இஸ்ரவேல் அரசர்கள் "யெரொபெயாமின் பாவங்களில் நடந்தனர்" என்று நாம் இருபத்தியோரு முறை வாசிக்கின்றோம்.*

*[21]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், அழைத்தல் மீதான சில ஆலோசனைகளுக்கு இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "தேவன் விரும்புகின்ற வகையிலான இல்லம்" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும்.*
*[22]யாத்திராகமம் 12:7-13; 13:3-10 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.*
*[23]யாத்திராகமம் 13:11-13ஐக் காணவும்.*